செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 185 நாள் : 1/4/17

**வேலூர் ஏப்ரல் 2017 (04/04/2017) மற்றும் மே 2017 (02/05/2017) ஆகிய 2 மாதங்களில் முதல் செவ்வாய் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் தேசிய அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம்கள் ரத்து செய்ய படுகிறது// வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ. ராமன், இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு**

வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க வட்டார அளவில் சிறப்பு முகாம்கள் 14.03.2017 முதல் 16.05.2017 வரை நடைபெறுவதால் ஏப்ரல் 2017 (04/04/2017) மற்றும் மே 2017 (02/05/2017) ஆகிய 2 மாதங்களில் முதல் செவ்வாய் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் "காயிதே மில்லத் கூட்ட அரங்கில்" மருத்துவ குழுவின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு ஊனத்திற்கான சான்றுடன் கூடிய தேசிய அடையாள அட்டை Single Window System நடைபெறும் தேசிய அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம்கள் ரத்து செய்ய படுகிறது என வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் மாற்றுத்திறனாளிகள் சிரமம் இன்றி தேசிய அடையாள அட்டையினை ஒரே இடத்தில் பெற்றிட ஏதுவாக ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள "காயிதே மில்லத் கூட்ட அரங்கில்" மருத்துவ குழுவின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு ஊனத்திற்கான சான்றுடன் கூடிய தேசிய அடையாள அட்டை Single Window System மூலம் வழங்கப்பட்டுவருகிறது. வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க வட்டார அளவில் சிறப்பு முகாம்கள் 14.03.2017 முதல் 16.05.2017 வரை நடைபெறுவதால் ஏப்ரல் 2017 (04/04/2017) மற்றும் மே 2017 (02/05/2017) ஆகிய 2 மாதங்களில் முதல் செவ்வாய் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் தேசிய அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம்கள் ரத்து செய்ய படுகிறது , பின்னர் ஜுன் 2017 ஆம் மாதம் முதல் வழக்கம் போல் ஒவ்வொரு மாதமும் முதலாம் செவ்வாய் கிழமை அன்று தொடர்ந்து முகாம் நடைபெறும் என அறிவுறுத்தியுள்ளார்

இவ்வாறு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.ஏ.இராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செ.ம.தொ.அ. 2017
வேலூர்—9.